*18*

# தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 2

## (3:14-22)

*சபை பூரணப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பு கின்றேன், நீங்கள் அவ்வாறு விரும்புவதில்லையா? தெய்வீகத்துவப் பகுதியில் இது அவ்வாறே உள்ளது; சபைக்கான தேவனுடைய தெய்வீக வடிவமைப்பு தவறு எதுவும் இல்லாததாக உள்ளது. இருப்பினும் மனிதத்துவப் பகுதியில், சபை பிரச்சனைகள் நிறைந்ததாக உள்ளது - ஏனென்றால், இது மக்கள் நிறைந்ததாக உள்ளது, மக்கள் பிரச்சனைகளைக் கொண்டுள்ளனர். இந்த உண்மை, சிலரைச் சங்கடப்படுத்துகிறது, அவர்கள் சபையின் பூரணமற்ற தன்மைகளை மறைக்க முயற்சி செய்கின்றனர். இது சிலரை, சபையைவிட்டுச் சென்றுவிடும் அளவு தொல்லைப்படுத்துகிறது.*

*சபையின் குறைவுகளைப் பற்றிக் கர்த்தர் எப்பொழுதுமே நேர்முறை யானவராக இருந்துள்ளார். ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களைப் பற்றிய நமது படிப்பில், இயேசுவின் சபைகளுடைய சபைக்குழுமங்கள், தேவன்மீதான தங்கள் அன்பை விட்டுவிடுதல் (2:4), தேவபக்தியற்ற வாழ்வை வாழ்தல் (2:14, 15, 20), மற்றும் மாய்மாலத்தினால் நிறைந்தும் இருத்தல் (3:1, 2) என்பது அவற்றிற்குச் சாத்தியமானதாக உள்ளது என்பதை வெளிப்படுத்த அவர் தயங்கியதில்லை என்பதைக் கண்டிருக்கின்றோம்.*

*ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களைப் படித்தல் என்பது, நீங்கள் ஒரு வீட்டாரைக் காணச்செல்லும்போது அந்த வீட்டின் பெண்மணியினிடத்தில் முன் எச்சரிக்கை செய்யாமல் அந்த வீட்டிற்குச் செல்லுதலைப் போன்றதாக உள்ளது. அந்த வீடு, நீங்கள் காண்பதற்கு எப்படி இருக்க வேண்டும் என்று அந்தப் பெண்மணி விரும்புவாரோ, அவ்வாறு இருப்பதற்குப் பதிலாக அது வழக்கமாக இருக்கும் நிலையில் நீங்கள் காண்பதற்கு வாய்ப்பு உள்ளது: பழைய காகிதங்களும் பத்திரிக்கைகளும் குவிந்து கிடக்க, பொம்மைகள் சிதறியிருக்க, துணிகள் தரையில் கிடக்க, மிச்சமான உணவுகொண்ட தட்டுகள், பாதி வெறுமையான குளிர்பானப் புட்டிகள், மூலைகளில் தூசி அண்டியிருத்தல் - மற்றும் அவர்களின் வாழ்வறையே அந்த நிலையில் இருக்கும்![1]*

*வெவ்வேறான சபைக்குழுமங்களில் கர்த்தர், பாவத்தை அங்கீகரியாது இருந்திருப்பினும் - மற்றும் மனந்திரும்பும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டிருப்பினும் - அவர் இன்னமும் அவர்கள்மீது அன்புகூர்ந்திருந்தார். இது*

லவோதிக்கேயா சபையைக் காட்டிலும் வேறு எவ்விடத்திலும் அதிக தெளிவாய் இருப்பது இல்லை. இந்த சபைக்குழுமத்தைப் பற்றி நல்லதாகக் கூறுவதற்குக் கர்த்தர் ஒன்றும் கொண்டிருந்தது இல்லை, ஆனாலும் அவர்களை அவர் இன்னமும் அன்புகூர்ந்தார் (3:19). அவ்வாறே, நீங்களும் நானும்கூட, சபையை அதன் எல்லாத் தவறுகளுடனும் அன்புகூர வேண்டும். சபையின் பூரணமற்ற தன்மைகளுடன் அதை நாம் அன்புகூரக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அதை நாம் ஒருக்காலும் அன்பு கூரமாட்டோம் - ஏனெனில் அது எப்போதுமே குறைகளைக் கொண்டிருந்தது, எப்போதுமே குறைகளைக் கொண்டிருக்கும்.

## மறுகண்ணோட்டம் (3:14-17)

நமது முந்திய பாடத்தில் நாம், லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்ட கடிதம் பற்றிய நமது படிப்பை தொடங்கினோம். அந்த நகரத்தின் குடிமக்களுடைய மூன்று விவரிப்புகளைக் குறிப்பிடுவதைக் கொண்டு அதை நாம் தொடங்கினோம்: (1) செல்வ வளம்: லவோதிக்கேயர்கள் அனேகமாக ஆசியாவிலேயே மிகுந்த செல்வந்தர்களாக இருந்திருக்கலாம். (2) ஆரோக்கிய வளம்: அருகில் இருந்த ஒரு மருத்துவ மையம், கண்களுக்குப் புகழ்பெற்ற கலிக்கம் ஒன்றைத் தயாரித்தது. (3) நன்கு உடுத்துவிக்கப்பட்டிருந்த நிலை: லவோதிக்கேயா, உயர்தரமான கறுப்புக் கம்பளியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் அங்கிகள் மற்றும் பிற உடைகள் ஆகியவற்றின் தயாரிப்பில் கவனம் செலுத்தும் வடிவமைப்பு மையமாக விளங்கியது. (வரைவட்டவணையைக் காணவும்.) அந்தக் குடிமக்களின் எண்ணப்போக்கு, “எங்களுக்கு ஒன்றும் குறைவில்லை. நாங்கள் சுயநிறைவு உடையவர்களாய் இருக்கின்றோம்!” என்ற வார்த்தைகளில் தொகுத்துரைக்கப்பட முடியும்.

இயேசு தம்மை, “உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், ... ஆமென் என்பவர்” (வசனம் 14ஆ) என்று விவரித்ததை நாம் கண்டோம் - அவர் விஷயங்களை அவற்றின் உண்மை நிலையில் கண்டார் மற்றும் அவர் தமது மதிப்பீட்டில் நம்பத்தக்கவராக இருந்தார். லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிய அவரது மதிப்பீடு என்னவாக இருந்தது? அவர்கள் “குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருந்தனர்” என்று இயேசு கூறினார் (வசனங்கள் 15, 16), இது அவரது வயிற்றில் சுகவீனத்தை ஏற்படுத்திய ஒரு நிலையாக இருந்தது! அவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதற்கு மாறாக, “குளிராயாவது” (முற்றிலும் வெளியேறிய நிலை) அல்லது “அனலாயானது” (முற்றிலும் உள்ளாக இருக்கும் நிலை) இருக்கும் நிலையை அவர் விரும்பித் தேர்ந்துகொண்டார் (வசனம் 15).

ஒருமுறை, இரண்டு பையன்கள் ஒரு சிறிய சிகப்பு நிற (பொம்மை) வண்டியைக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தனர். வண்டிக்குள் ஒரு பையனை வைத்து இன்னொருவன் அந்த வண்டியை இழுத்துக் கொண்டிருந்தான், ஆனால் வண்டிக்குள் இருந்த பையன் தனது பாதங்களை வெளியே நீட்டித் தரையில் இழுத்துக்கொண்டு செல்லும்படித்

தொங்கவிட்டிருந்தான். கடைசியில், வண்டியை இழுத்துக் கொண்டிருந்த பையன் அதை நிறுத்தி, வண்டிக்குள் இருந்த பையனிடத்தில், "உள்ளே இரு அல்லது வெளியே வந்துவிடு, ஆனால் உன் பாதங்களைத் தரையில் போட்டு இழுப்பதை நிறுத்திவிடு[2] - ஏனென்றால் நீ என்னைக் களைப்படையச் செய்கின்றாய்!" என்று கூறினான்.

லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதற்கு மாறாகக் குளிராய் இருப்பதை இயேசு விரும்பித்தேர்ந்து கொண்டதற்குப் பின்வரும் மூன்று காரணங்கள் கருத்தாகத் தெரிவிக்கப் பட்டது: (1) குளிராய் இருத்தல் என்பது அதிகம் நேர்மையானதாக உள்ளது, (2) வெதுவெதுப்பாய் இருப்பவரை மாற்றுவதைக் காட்டிலும் குளிராய் இருப்பவரை மாற்றுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது, மற்றும் (3) குளிராய் இருப்பவர்கள், வெதுவெதுப்பாய் இருப்பவர்களைக் காட்டிலும் அதிகமாக சபைக்கு ஊறுவிளைவிப்பதில்லை.

பின்பு நாம், லவோதிக்கேயாவில் இருந்த சபையில் அந்த நகரத்தின் எண்ணப்போக்குகள் தனதாக்கப்பட்டிருந்ததைக் கவனித்தோம். வசனம் 17அ, "நீ, … நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்'' என்று கூறுகிறது. அவர்கள் அக்கறையற்ற தன்மையை ஒழுக்கநெறி என்பதாகக் கருதினர்! மனிதர்கள் தங்கள் உழைப்புகளில் தங்கள் சக்தியைத் தீர்ந்துபோகச் செய்யமுடியும், அதைப் பாராட்டத்தக்கதாக மற்றவர்கள் கண்டறிகின்றனர்; விளையாட்டுப் போட்டியொன்றில் பார்வையாளர்கள் உணர்வெழுச்சியடைய முடியும், அவர்கள் ''விசிறிகள்'' என்று அழைக்கப்படுகின்றனர்; ஆனால் மதரீதியாக அதிகம் உணர்வெழுச்சி அடைந்திருத்தல் என்பதைப் பலர், ருசி குறைந்ததாக நினைக்கின்றனர்.

யாரோ ஒருவர், வெதுவெதுப்பான தன்மையை, சபையில் "டிரேஜன் குதிரை" என்று அழைத்துள்ளார். "டிரேஜன் குதிரை" என்ற சொற்றொடர், கிரேக்கர்கள் - டிரேஜர்கள் ஆகியோரின் யுத்தத்தில் இருந்து நமக்குக் கிடைத்துள்ளது,[3] இதில் கிரேக்கர்கள், ஆசியா மைனரின் வடமேற்குப் பகுதியில் இருந்த டிராய் நகரத்தை முற்றுகையிட்டிருந்தனர். ட்ரேஜன் நகரத்தில் இருந்தவர்களுக்குப் பரிசாக ஒரு மாபெரும் மரக்குதிரையை அளிக்கும் திட்டத்தை யுலிஸ்ஸெஸ்[4] பிறப்பித்தபோது, முரண்பாடு ஒரு இக்கட்டான நிலையை அடைந்தது. ட்ராய் நகரின் அரசருடைய மகளான கேசன்ட்ரா, அந்தப் பரிசைப் புறக்கணிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தாள்: ''கிரேக்கர்கள் பரிசுகளைச் சுமந்து வரும்போதுகூட அவர்களுக்கு நான் அஞ்சுகின்றேன்.'' கேசன்ட்ராவின் அறிவுரை புறக்கணிக்கப்பட்டது, பரிசாகத் தரப்பட்ட குதிரை, (நகரத்தின்) மதில் களுக்குள் இழுத்துவரப்பட்டது. அந்த இரவில், கிரேக்கப் போர்வீரர்கள் அந்தக் குதிரைக்குள்ளிருந்து வெளியில் வந்து, நகரத்தின் வாயில்களைத் திறந்துவிட்டு, கிரேக்கப்படையை உள்ளே அனுமதித்தனர். ட்ரேஜன் நகரமக்கள் அடிக்கப்பட்டனர், அந்த நகரம் அழிக்கப்பட்டது.

வெதுவெதுப்பான தன்மை, "ட்ரேஜன் குதிரை" என்று அழைக்கப் பட்டுள்ளது, ஏனென்றால் இது நமது மத்தியில் சகித்துக் கொள்ளப்

*பட்டுள்ளது. இது அபாயகரமானதாகக் காணப்படுவதில்லை, ஏனென்றால் இது கர்த்தருடைய நோக்கத்தை உண்மையில் எதிர்ப்பதில்லை, மற்றும் இது அதற்குத் தன்னை நண்பனாகக் காண்பித்து நடிக்கக்கூடச் செய்கிறது. இருப்பினும், வெதுவெதுப்பான தன்மை என்பது, சாத்தானின் சேனைகளுக்குக் கதவைத் திறந்துவிடக்கூடும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இது சபையின் அழிவை விளைவிக்கக் கூடும். இது இயேசுவை வியாதிக்குள்ளாக்கியது, இது நம்மையும் வியாதிக்குள்ளாக்க வேண்டும்! வெதுவெதுப்பான தன்மை என்பது, லவோதிக்கேயர்களை "நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாய்" ஆக்கியிருந்தது (வசனம் 17ஆ). அவர்களின் நிலை மற்றும் குணமாக்கப்படுதல் ஆகியவற்றைக் குறித்துப் பின்வரும் வரைவட்டவணையில் காணவும்.*

## *பரிகாரம்/நிவர்த்தி (3:18, 19ஆ)*

*லவோதிக்கேயாவில் இருந்த சபையின் ஆவிக்குரிய நிலையானது கவலைக்கிடமானதாக இருந்தது, ஆனால் நம்பிக்கையற்றதாக இருக்கவில்லை. இயேசு பின்வருமாறு கூறினார்:*

> *நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம்[5] தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும்,[6] நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்[7] (வசனம் 18).*

| **நகரம் (மற்றும் சபை)** | **நிலை (வச. 17)** | **குணமாக்குதல் (வச. 18)** |
|---|---|---|
| செல்வவளம் *(வங்கித்துறை)* | *தரித்திரர்* | புடமிடப்பட்ட பொன் |
| மருத்துவ மையம் *(கண்களுக்கு விசேஷித்த சிகிச்சை)* | பார்வையற்றவர் | வெண்வஸ்திரங்கள் |
| உடைத் தயாரிப்பு நிறுவனம் *(கறுப்புக் கம்பளி)* | நிர்வாணி | கண்களுக்குக் கலிக்கம் |

*உலகப் பிரகாரமான செல்வத்தை நம்பியிருப்பதற்குப் பதிலாக, அவர்கள் கர்த்தரிடத்தில் இருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ளக்கூடிய உண்மையான செல்வங்களை நாடியிருக்க வேண்டும்: ஆவிக்குரிய வகையில் அவர்களைச் செல்வந்தர்களாக்குவதற்கு, "நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்."[8] மலைப்பிரசங்கத்தில் இயேசு பின்வருமாறு கூறியிருந்தார்:*

> *பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்,*

> *இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை (மத்தேயு 6:19, 20).*[9]

*இயேசுவின் வாசகர்கள் (லவோதிக்கேயக் கிறிஸ்தவர்கள்), தங்களின் அழகுமிகுந்த கறுப்பு உடைபோதுமானது என்று நினைப்பதற்குப் பதிலாக, தங்கள் ஆவிக்குரிய நிர்வாணம் வெளிப்படுத்தப்படாதபடிக்குத் தங்களுக்கு "வெண் உடைகளை" உடுத்திக்கொள்ளுதல் அவசியமாய் இருந்தது என்று நினைக்க வேண்டியிருந்தது. வெள்ளை (அல்லது தூய்மையான) உடைகளின் அடையாளத்துவம், வெளிப்படுத்தின விசேஷத்தில் இரண்டு வலியுறுத்தங்களைக் கொண்டிருந்தது: (1) "வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 7:13) "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (7:14). லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், வெள்ளை அங்கிகளை உடுத்துவதற்குத் தங்களையல்ல, ஆனால் இயேசுவின்மீதே சார்ந்திருக்க வேண்டியிருந்தது. (2) 19:8ல் கிறிஸ்துவின் மணவாட்டி "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்"[10] தரித்துக் கொண்டிருந்ததாகச் சித்தரிக்கப்படுகிறது, மற்றும் நமக்கு, "அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" என்று கூறப்படுகிறது. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் வெள்ளை உடைகள் உடுத்திக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் வாழவேண்டிய பிரகாரம் வாழத்தொடங்க வேண்டியிருந்தது.*

*பிரிகியாவின் கண்மருத்துவத் தூளைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, அவர்கள் வாழ்வின் உண்மை நிலையைக் காணக்கூடும்படிக்குத் தங்கள் கண்களில் இடுவதற்குப் பரலோகத்தின் "கண்கலிக்கத்தை" விரும்ப வேண்டியிருந்தது.*[11] *அவர்களுக்கு, தேவனுடைய வசனத்தைப் படிப்ப தாலும் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிவதாலும் மாத்திரமே வரக்கூடிய ஒரு புதிய கண்ணோக்கு அவசியமாய் இருந்தது.*

*வசனம் 18ல் இயேசுவின் புத்திமதியில் உள்ள, "வாங்கிக்கொள்ளவும்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்: "நான், நீ ... நெருப்பிலே புடமிடப் பட்ட பொன்னையும், ... வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், ... உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டு மென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்." நேரடியான அர்த்தத்தில் நாம், இயேசு குறிப்பிட்ட ஆவிக்குரிய பொருட்களை வாங்க (அல்லது ஈட்ட) முடியாது,*[12] *ஆனால் அவைகள் இன்னமும் சிலவற்றைக் கிரயமாகக் கொடுக்க வேண்டியவைகளாக உள்ளன; ஒரு விலை செலுத்தப்பட்டாக வேண்டும். லவோதிக்கேயர்கள் தங்கள் அக்கறையற்ற தன்மைகளை, தங்களின் ஆவிக்குரிய வகையிலான சுயநிறைவை மற்றும் தங்கள் மேட்டிமையை விட்டுவிட வேண்டியிருந்தது!*

*பின்பு இயேசு, அவர்கள் தங்கள் எண்ணப்போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் தங்கள் உற்சாகத்தை மீண்டும் தூண்டிவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்: "ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து,*[13]

*மனந்திரும்பு"[14] (வசனம் 19ஆ)! "ஜாக்கிரதையாயிருந்து" என்ற வார்த்தை யானது, வசனங்கள் 15 மற்றும் 16ல் உள்ள ''அனல்'' என்ற அதே வார்த்தையில் இருந்தே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கர்த்தர், (தமது மக்கள்) வெதுவெதுப்பாய் இருப்பதைக் காட்டிலும் குளிராய் இருப்பதை விரும்பித் தேர்ந்து கொள்கின்றார் (3:15), ஆனால் தமது மக்கள் அக்கினியாய் இருக்க வேண்டும் என்பதையே அவர் உண்மையில் விரும்புகின்றார்! வெதுவெதுப்பான கிறிஸ்தவரும், குளிரான அவிசுவாசியும் ஆகிய இருவருமே இழந்து போகப்படுவார்கள்; தேவனுடைய ஊக்கமான பிள்ளை மாத்திரமே ஆசீர்வதிக்கப்படுவார்!*

## *காரணம் (3:19அ, 20)*

*லவோதிக்கேயாவில் இருந்த சபையின் உறுப்பினர்கள், தங்களை இயேசு வெறுத்தார் என்று முடிவு செய்யும்படியான இவ்வித கடுஞ்சொல் மொழிநடையை இயேசு பயன்படுத்தியிருந்தார். இவ்விதமாக அவர், "நான் நேசிக்கிறவர்களெவர்களோ[15] அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக் கிறேன்" (வசனம் 19அ) என்று கூடுதலாகக் கூறுவதற்குத் துரிதப்பட்டார். சிலர், கடிந்துகொள்ளுதலையும் திருத்துதலையும் பகையுணர்வு அல்லது விரோதம் என்பதுடன் சமமாகப் பாவிக்கின்றனர், ஆனால் தேவனுடைய ஒழுங்கு நடவடிக்கை, அன்பின் வெளிப்பாடாக உள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ[16] அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்'' என்று குறிப்பிட்டார் (எபிரெயர் 12:6).[17] இன்னொரு வருக்குள் அவரது ஆத்துமாவை அபாயத்திற்குள்ளாக்கக்கூடிய பாவத்தைக் கண்டு, அமைதியாய் இருத்தல் என்பது அன்பின் அடையாளமாயிராமல், அன்புக் குறைவின் அடையாளமாக உள்ளது.*

*பின்பு இயேசு, லவோதிக்கேயக் கிறிஸ்தவர்களின் மீதான தமது அன்பின் வெளிப்பாடாக, வேதாகம வசனங்களில் காணப்படும் மிகவும் இனிமையான அழைப்புக்களில் ஒன்றைக் கொடுத்தார்: ''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்,[18] ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து,[19] அவனோடே போஜனம்பண்ணுவேன்,[20] அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வசனம் 20).*

*இந்த வார்த்தைகள் லவோதிக்கேயர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி யிருக்க வேண்டும், ஏனெனில் அவர்கள் தங்கள் இருதயங்களில் இருந்தும் வாழ்வில் இருந்தும் இயேசுவை வெளியே தள்ளியிருந்தனர் என்று இயேசு வெளிப்படுத்தினார். அவர்கள் இவ்வாறு செய்திருந்ததைப் பற்றி அனேகமாக அறியாமல்கூட இருந்திருக்கலாம். இது நம்மில் எவருக்கும் நடைபெறக்கூடும், விசேஷமாக நாம் கர்த்தருக்கான நம் ஒப்புக் கொடுத்தலில் மனநிறைவடைந்தவர்களாய் ஆகியிருந்தால் இவ்வாறு நடைபெறக் கூடும்.*

*அதே வேளையில், இயேசுவின் வார்த்தைகள் லவோதிக்கேயர்களை*

*உற்சாகப்படுத்தி இருக்கவும் வேண்டும், ஏனெனில் அவர்களுடன் அவர் ஒரு நெருங்கிய உறுவுமுறையை மீண்டும் விரும்பியதையும் அவர் உறுதிப்படுத்தி இருந்தார். அந்த நாட்களில் (இன்றைய நாட்களில் பொதுவான உண்மையாக இருப்பதுபோலவே), யாரேனும் ஒருவருடன் உணவு அருந்துதல் என்பது அவருடன் ஐக்கியம் கொள்ளுதலாக இருந்தது.[21] இந்தக் கிறிஸ்தவர்கள் அவரிடத்திற்கும் அவரது வழிக்கும் திரும்பினார்கள் என்றால், ஐக்கிய விருந்து திரும்பக் கட்டுவிக்கப்பட முடியும் என்று இயேசுவின் கடிதம் சுட்டிக்காண்பித்தது.*

*இது நடைபெற வேண்டும் என்று இயேசு எவ்வளவு அதிகமாய் விரும்பினாலும், அவர் தமது வழியை அவர்களின் வாழ்விற்குள் வலிந்து திணிக்கமாட்டார்; அவர் எவரொருவரின் இருதயக் கதவையும் உடைத்துத் தள்ள மாட்டார். மாறாக அவர், கதவுக்கு வெளியே பொறுமையாகக் காத்திருந்து, அவர்களின் கவனத்தைப் பெறவும் அனுமதி கேட்கவும் முயற்சி செய்தார். முடிவு அவர்களுடையதாக இருந்தது.[22]*

*ஹோல்மன் ஹன்ட் அவர்களால் வரையப்பட்டு, "உலகின் ஒளி" என்று தலைப்பிடப்பட்ட ஒரு வரைகலை ஓவியமானது, கதவருகில் கிறிஸ்து நிற்பதன் மிகப் புகழ்பெற்ற சித்தரிப்பாக உள்ளது. அந்தச் சித்திரத்தில், இயேசு தமது கரத்தில் ஒரு விளக்குடன் கதவுக்கு முன்பாக நிற்கின்றார். கதவின் மீது படரும் கொடி வளர்ந்துள்ள அளவுக்கு நீண்ட காலமாகக் கதவு பூட்டப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இயேசு பொறுமையாகத் தொடர்ந்து தட்டுகின்றார். திரு. ஹன்ட் அவர்கள் தமது இந்தச் சித்திரத்தை வரைந்து முடித்தபின்பு, தமது நண்பர் ஒருவரை அழைத்து இதைக் காண் பித்தார் என்பதாக ஒரு கதை நிலவுகிறது. அந்த நண்பர் இந்தச் சித்திரத்தைப் பார்த்துவிட்டு, "ஆனால் இந்தச் சித்திரம் முழுமையடையவில்லை. கதவின் வெளிப்புறத்தில் தாழ்ப்பாள் ஒன்றை இடுவதற்கு நீங்கள் மறந்து விட்டீர்களே'' என்றார். அதற்கு திரு. ஹன்ட் அவர்கள், ''ஒரு நோக்கத்துடன்தான் நான் அவ்வாறு இதை வரைந்தேன். கதவு என்பது மனித இருதயம் என்பதை நீங்கள் காண்கின்றீர்கள், இருதயமானது உள்ளிருந்து மட்டுமே திறக்கப்பட முடியும்" என்று கூறினார்.*

## *விளைவு (3:21, 22)*

*லவோதிக்கேயாவில் இருந்த சபையானது தங்கள் ஆவிக்குரிய செயல்துடிப்பின்மையை வெற்றிகொண்டால், அற்புதமான ஆசீர்வாதங்கள் முன்னால் காத்திருந்தன. இயேசு, "நான் ஜெயங்கொண்டு[23] என் பிதாவினு டைய சிங்காசனத்திலே[24] அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்'' (வசனம் 21). இயேசுவுடன் அவரது அரியணையில் அமருதல் என்பது அவருடன் ஆளுகை செய்தலாக உள்ளது![25] லவோதிக்கேயாவில் வாழ்ந்தவர்கள், அந்த நகரத்தின் குடிமக்களாக இருப்பதை ஒரு கனத்திற்குரிய விஷயமாகக் கருதினர்; இயேசுவுடன் அவரது அரியணையில் வீற்றிருந்து ஆளுகை*

*செய்தல் என்பது எவ்வளவு மாபெரும் கனத்திற்குரிய விஷயமாய் இருக்கவேண்டும்!*

*மீண்டும் ஒருமுறை இயேசு, நம்மைத் தனிப்பட்ட வகையிலான பயன்பாட்டை ஏற்படுத்தச் செய்கின்றார்: "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (வசனம் 22).*

## முடிவுரை

*ஏழு கடிதங்கள் பற்றிய நமது படிப்பின் முடிவுக்கு நாம் வந்திருக் கையில், 3:20-22ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக்கொண்டு இதை முடிப்பதைவிட மேன்மையான வழியொன்றை என்னால் கற்பனை செய்ய இயலவில்லை. இவ்வார்த்தைகள், லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்திற்கு ஏற்புடையதான முடிவாக இருப்பதோடு, எல்லாக் கடிதங் களுக்கும் இது ஒரு பொருத்தமான முடிவை அளிப்பதாகவும் உள்ளது:*

> *இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.*

*இயேசுவின் அழைப்பும் வாக்குத்தத்தமும் சபைக்குழுமத்திற்கானதாக இராமல் தனிநபருக்கானதாக உள்ளன: "ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, ... ஜெயங்கொள்ளுகிறவனெவனோ" இயேசு தமது கரங்களை ஒவ்வொரு நபரை நோக்கியும் நீட்டுகின்றார்.*

*அவரை ஒருக்காலும் தங்கள் வாழ்வில் அனுமதித்திராதவர்களை(யும்) அவர் அழைக்கின்றார். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4). அவர்மீது நீங்கள் விசுவாசம் கொண்டிருந்தால், நீங்கள் "கிறிஸ்து வுக்குள்" ஞானஸ்நானம் பெறமுடியும், இவ்விதமாக "கிறிஸ்துவை" தரித்துக் கொள்ள முடியும் (கலாத்தியர் 3:26, 27). நீங்கள் அவரது அங்கமாவீர்கள், அவர் உங்கள் அங்கமாவார்!*

*இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் 3:20ல் இயேசுவின் அழைப்பு, உதாசீனப் படுத்துகிற தேவபிள்ளைக்கே முதலாவதாகவும் முதன்மையானதாகவும் உள்ளது என்ற உண்மையைப் பற்றிய கண்ணோக்கத்தை நாம் இழந்து விடக்கூடாது. லவோதிக்கேயர் களைப்போல், நம்மில் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றவர்கள் நமது வாழ்விலிருந்து கிறிஸ்துவை வெளியேற்றி (கதவை) மூடிவிடுதல் என்பதை நாம் அறியாமலேயே செய்து விடக்கூடும். உங்கள் சொந்த வாழ்வைக் கண்ணோக்குவதற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்: ஒருகாலத்தில் நீங்கள்*

*கிறிஸ்தவத்தைப் பற்றி மிகவும் உற்சாகமுள்ளவர்களாய் இருந்தீர்களா? நீங்கள் எப்போதாவது இயேசுவுக்கு மிகவும் நெருக்கமானவர்களாய் இருந்தீர்களா? கடந்தகாலத்தில் நீங்கள் அவரது பிரசன்னத்தைப் பற்றி அதிகம் அறிந்திருந்தீர்களா? இப்போது இயேசு உங்கள் இருதயக் கதவருகில் நின்றுகொண்டு அதைத் தட்டுவதற்கான சாத்தியக்கூறு உள்ளதா? இந்தப் பாடம், உங்கள் கவனத்தைப் பெறுவதற்கான கர்த்தருடைய வழியாக இருக்கலாம். உங்கள் ஊழியத்தில் நீங்கள் வெதுவெதுப்பான வர்களாகியிருந்தால், இன்றே நீங்கள் மனந்திரும்பி அவரிடத்திற்கு வரும்படி நான் ஜெபிக்கின்றேன் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16; 1 யோவான் 1:9).*

*உங்கள் இருதயத்திற்குள் நீங்கள் இயேசுவை அனுமதிக்க வேண்டி யிருந்தால், அதை நான் உங்களுக்காகச் செய்ய விரும்புகின்றேன். ஆண் களும் பெண்களும், மரணம் என்பது ஒரு இதயத்துடிப்பு தூரத்தில் மாத்திரமே இருக்கும்போது, தயங்குவதைக் கண்டு எனது இருதயம் வெடிக்கிறது. உங்களுக்காக நான் கர்த்தருக்குக் கீழ்ப்படிய முடியாது; அந்த முடிவை நீங்கள் மாத்திரமே மேற்கொள்ள முடியும். இன்னும் நீங்கள் அதை மேற்கொள்ளாதிருந்தால், நீங்கள் - உடனடியாக - உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி உங்கள் வாழ்வை அவருக்குக் கீழ்ப்படுத்த வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன்!*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*லவோதிக்கேயாவைப் பற்றிய இந்த இரண்டாவது பாடம் "மிகச்சிறந்த வாக்குத்தத்தம்" என்று தலைப்பிடப்படலாம். லவோதிக்கேயாவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதம் பற்றிய பாடங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மற்ற தலைப்புகளில், "வியாதிப்பட்ட சமூகம்," "கிறிஸ்துவைப் பற்றித் தீவிரமாய் இருங்கள்!" மற்றும் "மூடிய கதவுடன் இருந்த சபை" (திறந்த கதவுடன் இருந்த பிலதெல்பியாவின் சபைக்கு நேர்மாறானது) என்பவைகள் உள்ளடங்கும். வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், தங்கள் வலிமையை* [vigor] *இழந்திருந்தனர் (3:16, 17), தங்கள் மதிப்பீடுகளை* [values] *இழந்திருந்தனர் (3:17, 18அ), தங்கள் கண்ணோக்கத்தை* [vision] *இழந்திருந்தனர் (3:18ஆ), மற்றும் தங்கள் உடைகளை* [vesture] *இழந்திருந்தனர் (3:17-22) என்று கூறி, அந்த சபைக்குழுமத்தை "மதியீனமான சபை" என்று அழைத்தார்.*[26]

*சிலர் ஏழு சபைகளைப் பற்றிப் பிரசங்கிக்கும்போது, அவர்கள் "(உள்ளூர் சபைக்குழுமத்திற்கான) ஒரு கடிதம்" என்பதன் மீதான ஒரு பிரசங்கத்தையும் கூட்டுகின்றனர். நான் அவ்வாறு செய்வதற்குப் பதிலாக, "இங்குள்ள சபைக்குக் கர்த்தர் ஒரு கடிதத்தை எழுதினால், அது எப்படியிருக்கும்? அவர் என்ன கூறுவார் என்று நான் வியப்படைகின்றேன்" என்று மாத்திரம் கூறுவதுண்டு. இதைப் பற்றிச் சிந்திப்பதற்கு எனது உரையைக் கேட்பவர்களுக்குச் சற்று நேரம் கொடுத்தபின்பு,*[27] *பெரும்*

பாலான சபைக்குழுமங்கள், ஆசியாவில் இருந்த ஏழு சபைகளின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றின் இணைவாக உள்ளன என்பதைச் சுட்டிக்காண்பித்து - "இந்த சபை அதற்கு விதிவிலக்காக இருப்பதில்லை" என்பதை கவனியுங்கள் என்று கூறுவதுண்டு. பின்பு நான், "கர்த்தர் எனக்கு ஒரு கடிதம் எழுதுவாரென்றால், அவர் என்ன கூறுவார்?'' என்று கூறுவதுண்டு. வந்திருக்கும் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட வகையில் பயன்பாட்டை மேற்கொள்ளும்படி நான் வற்புறுத்துவதுண்டு.[28]

---

குறிப்புகள்

[1]இந்தக் காட்சியானது ஒவ்வொரு இல்லத்திலும் நடக்கும் மாதிரியானதல்ல, ஆனால் சில இல்லங்களில் இது உண்மையானதாக உள்ளது. இது ஒரு கருத்தை ஏற்படுத்துவதற்காக மிகைப்படுத்தப்பட்டுள்ளது, பெரும்பாலான கவனிப் பாளர்கள் கருத்தைப் புரிந்துகொள்வார்கள். இந்தக்காட்சியை நீங்கள் வாழும் பகுதிக்கு ஏற்றவாறு தகவமைத்துக் கொள்ளுங்கள். [2]உலகில் நான் வாழும் பகுதியில், "பாதங்களை இழுத்துச் செல்லுதல்" என்பது, தயங்குதல் அல்லது தாமதப்படுத்துதல் என்று அர்த்தப்படுகிற பேச்சு உருவகமாக பயன்படுத்தப்பட முடியும். உலகில் நீங்கள் வாழும் பகுதியில் இதேவிதமான கூற்று ஒன்றை நீங்கள் கொண்டிருக்கலாம். [3]இந்த யுத்தம், ஹோமர் என்பவரின் தரமுயர்ந்த புராணங்களான *Ilia* மற்றும் *Odyssey* என்பவற்றின் கருத்துப் பொருளாக இருந்தது. அவற்றின் விபரங்கள் கிரேக்க மூடநம்பிக்கைகள் நிறைந்தவையாக இருந்தாலும், அவைகள் பெரும்பாலும் கி.மு. பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. [4]Ulysses என்பது அவரது பெயரின் இலத்தீன வடிவமாக உள்ளது, இந்த வடிவமைப்பானது, நம்மில் பலருக்கு, Odysseus என்ற அவரது கிரேக்கப் பெயரைக்காட்டிலும் அதிகம் பழக்கமானதாக உள்ளது. [5]இந்தப் புத்தகத்தில் "தன்னை ஏற்படுத்தியிருந்த சபை" என்ற முந்தின பாடத்தில் "நிர்வாணம்" என்ற வார்த்தையின் மீதான குறிப்புகளைக் காணவும். [6]இயேசுவே ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாக இருக்கின்றார் (எபேசியர் 1:3). [7]"நான் உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" என்ற வார்த்தைகள் திகைப்புக்குரியவைகளாக உள்ளன! அகிலத்தின் ஆண்டவராகிய இயேசு, அவர்களுக்கு கட்டளையிடாமல், ஆலோசனை சொல்லுகின்றார்! ஆகவே, கர்த்தர் நமக்கு "ஆலோசனை" சொல்லும்போது, நாம் கேட்போமாக. [8]1 பேதுரு 1:7ஐக் காணவும். [9]மத்தேயு 19:21ஐக் காணவும். [10]KJV வேதாகமத்தில் "clean and white" என்றுள்ளது.

[11]ஆவிக்குரிய வகையில் பார்வையற்ற தன்மை பற்றிய ஒரு கலந்துரையாடலை யோவான் 9:39-41ல் காணவும். [12]ரோமர் 4:1-5; எபேசியர் 2:8, 9 மற்றும் இவைபோன்ற வசனப் பகுதிகளைக் காணவும். [13]இந்தக் கட்டளையில் பயன்படுத்தப்பட்டுள்ள நிகழ்கால வினைச் சொல்லானது, தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. அவர்கள் கடந்தகாலத்தில் தொடர்ந்து வெதுவெதுப்பானவர்களாய் இருந்தது போலவே, எதிர்காலத்தில் தொடர்ந்து வைராக்கியமுள்ளவர்களாய்/அனலுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார். [14]"மனந்திரும்பு" என்பது ஒருமுறை மாத்திரம் செயல்படும் வினைச் சொல்லாக உள்ளது, இது ஒரேமுறை நடைபெறுகிற, தீர்மானமான செயலைக் குறிக்கிறது. [15]பிரியமான "அன்பு" என்பதற்கான கிரேக்க வார்த்தையான

*philia* என்பது இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. [16]இவ்வசனப்பகுதியில், "அன்பு" என்பதற்குப் புதிய ஏற்பாட்டின் மிகப்பொதுவான வார்த்தையான *agape* என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இதன் அடிப்படை அர்த்தம், 3:19ல் உள்ளதைப் போலவே இருக்கிறது. [17]இவ்வசனப்பகுதியானது நீதிமொழிகள் 3:12ல் இருந்து மேற்கோள் காண்பிக்கப்படுகிறது, இது சங்கீதம் 119:75ஐயும் குறிப்பிடலாம். [18]நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது; இயேசு தொடர்ந்து தட்டிக்கொண்டிருக்கின்றார். தட்டுதல் மற்றும் கூப்பிடுதல் (கூப்பிடுதல் என்பது ''என் சத்தத்தைக் கேட்டு'' என்ற சொற்றொடரினால் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது) என்பவற்றின் அடையாளத்துவம், இயேசு நமது இருதயங்களிலும் வாழ்விலும் அழைக்கப்பட வேண்டும் என்ற அவரது விருப்பத்தைக் குறிப்பதாக மாத்திரம் உள்ளது. இயேசு எவ்வாறு தட்டுகின்றார் மற்றும் கூப்பிடுகின்றார் என்பதை அறிய வேண்டும் என்று இந்தப் பாடத்தைக் கேட்பவர்களில் ஒருவர் வலியுறுத்துவாரென்றால், பின்வரும் கூற்று பயனுள்ளதாக இருக்கலாம்: "அவர் சூழ்நிலைகளின் மூலமாகத் தட்டுகின்றார், அவரது வசனத்தின் மூலமாக அழைக்கின்றார்" (Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989], 581). [19]யோவான் 14:23ஐக் காணவும். [20]"போஜனம் பண்ணுவான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, நாளின் பிரதான உணவிற்கான வார்த்தையின் வினைச் சொல் வடிவமாக உள்ளது, இது விரைவான சிற்றுண்டியாக இராமல், ஓய்வாக உண்ணும் விஷயமாக இருந்தது.

[21]''பரலோக விருந்து'' பற்றிய குறிப்பு ஒன்றும் மறைமுகமாய் உணர்த்தப்படலாம். (லூக்கா 22:30; வெளிப்படுத்தின விசேஷம் 19:9 ஆகிய வசனங்களைக் காணவும்.) [22]அவரது அழைப்பை அவர்கள் புறக்கணித்தால், நியாயத்தீர்ப்பு காத்திருந்தது. யாக்கோபு 5:9ஐக் காணவும், அங்கு இயேசு, கதவுக்கு முன்னால் இருக்கும் *நியாயாதிபதியாகச்* சித்தரிக்கப்பட்டுள்ளார். [23]இயேசு கடந்து சென்றிராத எதன்வழியாகவும் அவர்கள் கடந்து செல்லவேண்டியிராது என்று அவர் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தினார். அவர் மரணத்தை எதிர்கொண்டிருந்தார் - மற்றும் வெற்றிகொண்டிருந்தார். ஒரு பாடலில், "சிலுவையை நீ சுமக்காவிட்டால், கிரீடத்தை நீ அணிய முடியாது" என்ற வார்த்தைகள் உள்ளன. [24]இயேசு தமது உயிர்த்தெழுதலினால் சிலுவையை வெற்றிகொண்டார். பின்பு அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்று தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (நடபடிகள் 2:30-36). [25]கிறிஸ்தவர்கள் இயேசுவுடன் அரசாளுகின்றனர் என்பது வெளிப்படுத்தின விசேஷத்தின் மாபெரும் சத்தியமாக உள்ளது. நாம், இராஜரீகக் குடும்பத்தின் அங்கம் என்ற வகையில் அவருடன் இப்போது அரசாளுகின்றோம் (1:6; 5:10; ரோமர் 8:17; எபேசியர் 2:6 ஆகிய வசனங்களைக் காணவும்). மரணபரியந்தம் உண்மையாய் இருப்பவர்கள் அவருடன் "என்றென்றும்" அரசாளுவார்கள் (22:5; 2 தீமோத்தேயு 2:12ஐக் காணவும்). [26]Wiersbe, 579-81. [27]ஒரு வகுப்பு சூழ்நிலையில், இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்படி மாணவர்களுக்கு வாய்ப்புகள் தரப்படலாம். [28]தனிப்பட்ட குறைவுகளைக் காட்டிலும் சபைக்குழுமத்தின் குறைவுகளைச் சுட்டிக்காண்பிப்பதைப் பலர் விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர்.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *கர்த்தருடைய சபையின் தனிப்பட்ட சபைக்குழுமங்கள் எப்போதுமே பிரச்சனைகளைக் கொண்டிருந்தனவா? ஏன்? இது, நாம் சபையின்மீது அன்புகூரக்கூடாதென்று அர்த்தப்படுத்துகிறதா?*
2. *இயேசு, 3:18ல் அளித்த "நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்" என்பது என்னவாக உள்ளது?*
3. *"வெண் வஸ்திரங்கள்" என்பவை எவை?*
4. *"கண்ணுக்குக் கலிக்கம்" என்பது என்ன?*
5. *இந்த ஆவிக்குரிய பொருட்களை நாம் எந்தக் கருத்தில் "வாங்குகின்றோம்"?*
6. *3:19ன்படி, இந்த சபையை இயேசு ஏன் இவ்வளவு பலமாகக் கடிந்துகொள்கின்றார்?*
7. *நீங்கள் பின்வரும் கூற்றை ஒப்புக்கொள்கின்றீர்களா அல்லது கருத்து வேறுபடுகின்றீர்களா: "இன்னொருவரின் ஆத்துமாவை அபாயத்திற்கு உட்படுத்தும் தவறு ஒன்றை அவரில் கண்டும் அமைதியாக இருந்து விடுதல் என்பது அன்பின் அடையாளமாயிராமல், அன்புக்குறைவின் அடையாளமாகவே உள்ளது"?*
8. *3:20ல் பேசப்படுகிற "கதவு" என்பது என்ன?*
9. *தேவனுடைய பிள்ளையாக இருக்கின்ற ஒருவர் தமது இருதயம் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் இருந்து இயேசுவை வெளியேற்றி மூடிவிடுதல் சாத்தியமாக உள்ளதா? லவோதிக்கேயர்கள் தங்களின் வெதுவெதுப்பான தன்மையினால் அதைச் செய்தனர். நமது வாழ்வில் இருந்து இயேசுவை வெளியேற்றி மூடிவிடக்கூடிய மற்ற சில வழிகள் யாவை?*
10. *நாம் இயேசுவை வெளியேற்றி மூடிவிட்டோம் என்று கண்டறிந்தால், அவரை நாம் திரும்ப அனுமதிப்பது எவ்வாறு?*
11. *வெற்றிகொள்பவர்களுக்கு இயேசு 3:21ல் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?*